# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண்.96/2010

நாள்: 12.08.2024

பெயர்: பத்மநாபன் (வா.சா.1) த/பெ:சேதுராமன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) என்னுடைய தாத்தா செல்வையா காலத்தில் சுமார் 60–70 ஏக்கர் இருந்தது. என் தாத்தா செல்வையா நிறைய நபர்களுக்கு கடன் கொடுத்து வசூல் செய்வாரா என்றார் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கனவர் பெயர் ஜெயராமன் என்றால் சரிதான். ஜெயராமனின் தகப்பனார் பெயர் மகாராஜன் என்கிற மகாலிங்கம் என்றால் சரியல்ல. அவர் பெயர் மகாராஜன் மட்டும்தான். **வா.சா.ஆ.1** கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு தாவா சொத்து பிரதிவாதியின் மாமனார் மகாராஜனுடைய சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுவதற்கு முன்பு மகாராஜன் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான்.

2) மேற்கண்ட மகாராஜன் எனது தாத்தா செல்வையாவிடம் கடன் வாங்கியிருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என் தந்தை என்னிடம் கிரையமாக வாங்கப்பட்ட சொத்து என்றுதான் சொல்லியுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படும்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பின்னரும் தாவா சொத்தை மகாராஜன்தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம். தாவா சொத்து தற்போது எந்த நம்பர் பட்டாவில் உள்ளது என்றால் 408ம் நம்பர் பட்டாவில் உள்ளது. தாவா சொத்து 408 பட்டாவில் வருவதற்கு முன்பு எந்த எண் பட்டாவில் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

3) தாவா சொத்து 408ம் நம்பர் பட்டா வருவதற்கு முன்பு எந்த நம்பர் பட்டாவில் இருந்து வந்தது என்று என் தந்தையிடம் தெரிந்துகொண்டேனா

என்றால் நாங்கள் இதை பற்றி பேசிக்கொள்ளவேயில்லை. தாவா சொத்து 408 ம் நம்பர் பட்டா தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை சேதுராமன் பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கு 408 ம் நம்பர் பட்டாவில் என் தந்தை பெயர் வருவதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் தந்தையை கேட்டால்தான் தெரியும். நான் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பு பிரதிவாதி தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

4) பிரதிவாதி தரப்பில் தாவா சொத்திற்கான பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்துள்ளார். அதை நான் வழக்கிற்கு பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்த பிறகு பார்த்தேன். அந்தப்பட்டா பிரதிவாதி பெயரில் உள்ளதா, அவரது கனவர் பெயரில் உள்ளதா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் வாதியான என் தந்தை சேதுராமன் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். 373 ம் நம்பர் பட்டாவிற்கு என் தந்தையோ அல்லது எனது தாத்தாவோ தீர்வை செலுத்தியுள்ளார்களா என்றால் என் தந்தை தீர்வை செலுத்தியுள்ளார். அந்த தீர்வை ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்பட்ட பின்னரும் தாவா சொத்தை பிரதிவாதியின் மாமனார் மகாராஜன்தான் அவர் இறக்கும் வரை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. மகாராஜன் இறந்த பின்னர் வாரிசு அடிப்படையில் அவரது மகன் ஜெயராமன் தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. ஜெயராமன் இறந்த பின்னர் வாரிசு அடிப்படையில் அவருடைய மனைவியான பிரதிவாதி தாவா சொத்தை இன்றுவரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

5) தாவா சொத்தில் 1 புளியமரம் உள்ளது என்றால் சரிதான். அந்த புளிய மரத்தின் அடியில் ஒரு வீடு உள்ளது என்றால் வீடு எதுவும் இல்லை. எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் அந்த புளியமரத்தின் அடியில் வீடு எதுவும் இல்லை. மகாராஜன் குடியிருந்த வீட்டின் கதவு எண் என்னவென்று எனக்கு தெரியாது. மேற்கண்ட வீட்டின் கதவு எண் என்னவென்று நான் தெரிந்துகொள்வதற்கு

முயற்சி செய்தேனா என்றால் 2010 ம் ஆண்டிற்கு பிறகு முயற்சி செய்தேன். முயற்சி செய்ததன் அடிப்படையில் பழைய கதவு எண்.1/21 என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இருக்கலாம். பழைய கதவு எண்.1/21 ன் புதிய கதவு எண்.1/24 என்றால் இருக்கலாம். பிரதிவாதியின் கனவர் 1990ம் ஆண்டு இறந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.